# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol. 31 Jan 2018 Issue - 1

ஆசிரியர் உரை

# பேழைக்குள் வாருங்கள்

**தே**வ ஆவியினால் அருளப்பட்ட பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களைப் புரட்டும்போது, அவைகளில் பலவிதமான அழைப்புகள் பற்றி நாம் கவனிக்க முடியும். இந்த அழைப்புகள் வேதாகமத்தின் நாற்றங்கால் என்றழைக்கப்படுவதற்குத் தகுதியான ஆதியாகமம் நூல் தொடங்கி இறுதி நூலாகிய வெளிப்படுத்தல் விசேஷம் முடிய ஆங்காங்கே பரவிக் கிடக்கிறது. இந்த அழைப்புகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று, தேவனிடமிருந்து மனிதனுக்கான அழைப்பு (ஏசாயா 1:18; வெளி.22;17). இரண்டு, மனிதனிடமிருந்து மனிதருக்கான அழைப்பு ( சாமு.14:6,12; ராஜா 10:16). இதில், தேவனிடமிருந்து மனிதனுக்கான அழைப்பு பழுதில்லாதிருக்குமாதலால் அந்த அழைப்புகளில் ஒன்றின் பக்கமாக நாம் திரும்புவோம்.

எப்பொழுதும், **முதல்** என்பது சிறப்புக்குரிய ஒன்றாக இருக்கிறபடியால், தேவனிடமிருந்து மனிதனுக்குக் கிடைத்த முதல் அழைப்பு பற்றி இவ்வருடத்தின் முதல் மாதத்தில் நாம் கவனிக்கப் போகிறோம். அந்த அழைப்பு ஆதியாகமம் 7:1–ல் இவ்விதமாக உள்ளது. **நீயும், உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்** என்று. ஒருவேளை, நம் தமிழ் வேதாகமத்தில் பிரவேசியுங்கள் என்ற வார்த்தை இடம் பெற்றிருந்தாலும் மூல மொழியிலும், ஆங்கிலத்திலும் **வா, வாருங்கள்** என்று பொருள்படும்படியான வார்த்தைகளே பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த முதல் அழைப்பு பற்றித்தான் நாம் கவனிக்க உள்ளோம். இது தரும் பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கு முன்பாக, நமது மாறாத வழக்கத்தின்படி இதன் பின்னணிக் காரியங்களுக்குள்ளாகச் சென்று வருவோம்.

சர்வ வல்லவரிடமிருந்து வந்த இம்முதல் அழைப்பு விசுவாச வீரர்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ள நோவாவுக்குக் கிடைத்துள்ளது. இந்த நோவாவை வேதாகமம் மிக உயர்ந்த பக்தி பண்புப் பதங்களாகிய **நீதிமான், உத்தமன்** என்பவைகளைக் கொண்டு அலங்கரிக்கிறது. இப்பதங்களை வேதாகமம் முதன் முதலாக இவருக்குத்தான் பயன்படுத்தியுள்ளது. அவ்வளவு சிறப்புக்குரியவர் இந்த நோவா. ஒருவேளை எபிரெயர் ஆசிரியர் ஆபேலையும் இவ்வார்த்தைக்குச் சொந்தமாக்கியிருந்தாலும் அது பல நூற்றாண்டுகள் கழித்துதான் எழுதப்பட்டுள்ளதே தவிர, ஆதியாகமத்தில் இல்லையென்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்னும், இப்பதங்கள் வேறு சிலருக்கும் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பதால், அதாவது, உத்தமன் என்பது யோபுவுக்கும் (யோபு 1:1), நீதிமான் என்பது சகரியா (லூக்கா 1:6), சிமியோன் (லூக்கா 2:23) போன்றவர்களுக்கும் தொடர்புபடுத்தப்பட்டிருப்பதால் இம்மாபெரும் தேவமனிதனை இந்த வார்த்தைகளோடு மட்டும் சம்பந்தப்படுத்துவதில் எனக்கு உடன்பாடு இல்லை. இதைத் தாண்டி ஏதாவது ஒரு தனிச் சிறப்போடு அழைக்கவே மனம் விரும்புகிறது. என்ன செய்யலாம்?

சரி, **வானவில் நோவா** என்றழைத்து விடலாமா? இச்சிறப்புக்கு வேறு யாரும் சொந்தம் கொண்டாட முடியாதுதானே! வானவில், மானிடர் அனைவரும் அறிந்த ஒன்று. இன்றளவும் காணக்கூடிய வானவில் உடன்படிக்கையைத் தேவன் மனிதனோடு ஏற்படுத்தினதில் நோவாவின் பங்களிப்பை நாம் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. ஆகவே, இந்த நோவாவை, வானவில் நோவா என்றழைத்து இவருடைய பக்திக்கும், கீழ்ப்படிதலுக்கும், உறுதிக்கும் நாம் பெருமை சேர்ப்பது நல்லது.

இந்த **வானவில் நோவா** குப்பையிலே கிடந்த குண்டு மணியாகத் தன் காலத்தில வாழ்ந்துள்ளான். ஆதியிலே வானத்தையும், பூமியையும் உண்டாக்கிய தேவன் ஒவ்வொரு நாள் படைப்பிற்குப் பிறகும், தான் படைத்தவைகள் **நல்லது** என்று கண்டார். (ஆதி.1:10,12,18,21,25). ஆனால், ஆறாம் நாளில் மனிதனைப் படைத்த பிறகு **மிகவும் நன்றாயிருந்தது** என்று எண்ணினார் (1:31). ஆம் மனிதனைப் படைத்ததில் அப்படி ஒரு திருப்தி அவருக்கு. ஆயினும், கொஞ்ச காலத்தில் பூமியிலே மனிதனை உண்டாக்கினதற்காக **விசனப்படும் அளவுக்கு** (ஆதி.6:6) அவன் இழிநிலைக்குச் சென்றுவிட்டான். மனிதனுடைய அக்கிரமம் பூமியில் பெருகினதோடல்லாமல் அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததென்று காணுமளவுக்கு கேடாகிப் போய் விட்டது. தீமையைப் பார்க்கக் கூடாத சுத்தக் கண்ணனாகிய தேவன் (ஆபகூக்1:13), பூமியிலே தாம் உண்டாக்கின மனிதனை நிக்கிரகம் பண்ணத் தீர்மானித்தார் (6:7). அக்கிரமச் சிந்தையில் அகப்பட்டுக் கிடக்கும் மானிடர் யாவரும் தேவனின் இப்பார்வையைப் புரிந்து வாழ்வது அவசியம்.

இப்படிப்பட்ட மானிடருக்கு மத்தியில், வானவில் நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது (ஆதி.6:8). அடுத்த வசனம், நோவாவின் **வம்ச வரலாறு என்று ஆரம்பித்து,** நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருந்தான், நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான் (6:7) என்றுள்ளது. மத்தேயு 1:1–ல் இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு என்று உள்ளது. அதைத் தொட்டு ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான், ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான் என்று, யாக்கோபு யூதாவையும் அவன் சகோதரரையும் பெற்றான் என்றுள்ளது. ஆனால், யோவாவின் வம்ச வரலாறு என்று ஆரம்பித்து முன்னோர்களின் பெயர்களைச் சொல்லாமல், **நீதிமான், உத்தமன், தேவனோடு சஞ்சரித்தான் என்று கூறுகிறது.** ஏதோ, பரிசுத்த ஆவியானவர் தவறுதலாக இப்படி வெளிப்படுத்தி விட்டார் என்று என்னால் நினைக்க முடியவில்லை. கண்டிப்பாக அப்படி இருக்க முடியாது. அப்படியானால், வானவில் நோவாவின் வம்சம் நீதியும், உத்தமமும் தேவசஞ்சாரமும்தானோ! இப்படிப்பட்ட **வம்ச தகுதி** வேறு யாருக்கு இருக்கிறது? காரியங்கள் இப்படி இருக்கும்போது, இந்த நோவாவை ஏனைய பக்தி மான்களோடு போகிறபோக்கில் ஒப்பிடுவது எப்படிச் சரியாக இருக்கும்? கண்டிப்பாக வானவில் நோவா தனிச்சிறப்புக்குரியவரே!

இப்படித் தன்னிகரில்லா சிறப்பு கொண்ட நோவாவிடம், அக்கிரமச் சிந்தைக்காரரைப் பூமியோடு கூட அழிக்கத் தீர்மானம் பண்ணின தேவன், கொப்பேர் மரத்தால் ஒரு பேழையை உண்டு பண்ணச் சொல்லி அதற்கான அளவையும், அதைக்கட்ட வேண்டிய விதத்தையும் கட்டளையிட்டு (6:14–16), வானத்தின் கீழே ஜீவசுவாசமுள்ள சகல மாம்ச ஜந்துக்களையும் அழிக்க நான் பூமியின்மேல் ஜலப்பிரளாயத்தை வரப்பண்ணுவேன்; பூமியிலுள்ள யாவும் மாண்டுபோம் என்றார் (6:17) தொடர்ந்து 6:22–ல் நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம், செய்து முடித்தான் என்று நாம் வாசிக்கமுடியும்.

இந்த வானவில் நோவா, தேவன் இப்படி கட்டளையிட்டபடியெல்லாம் செய்து முடித்ததற்குப் பிறகு, கர்த்தர் நோவாவை நோக்கி: நீயும் உன் வீட்டார் அனைவரும் **பேழைக்குள் பிரவேசியுங்கள்;** இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன் என்றார் (ஆதி7:1). வானவில் நோவாவுக்கான இந்த அழைப்பு எப்படிப் பட்ட அழைப்பு என்பதை நாம் கவனித்து நமக்கான சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

### I. அழிவிலிருந்து தப்பிக் கொள்வதற்கான அழைப்பு

**வானவில் நோவா**வுக்குப் பேழைக்குள் வரும்படியான அழைப்பு நமக்குக் கற்றுக்கொடுக்கும் முதல் பாடம், அழிவு வரும்போது நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள ஆயுத்தமாக இருக்க வேண்டும் என்பது.

ஆபத்தும், அழிவும் இப்பூலோக வாழ்க்கையில் மனிதனுக்கு சம்பந்தமில்லாதவைகளல்ல. இந்த அழிவு ஆன்மாவுக்கும் வரும், சரீரத்துக்கும் வரும். ஆயினும், அவைகளை ஒருவன் எப்படி

எதிர்கொள்கிறான் என்பதை வைத்தே அவன் எப்படிப்பட்டவன் என்பதை நாம் தீர்மானிக்க முடியும். ஆதியிலே ஏதேன் தோட்டத்தில் தங்கள் ஆன்மாவுக்கு வந்த ஆபத்தை உணராதவர்களாகவே ஆதிப் பெற்றோர் இருந்தனர். **விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்ளுகிறான். பேதைகளோ நெடுகப் போய்த் தண்டிக்கப்படுகிறார்கள்** (நீதி.27:12) என்று ஞானி சாலமோனைக் கொண்டு ஆவியானவர் கூறியுள்ளார். ஆகவே, ஆபத்திலிருந்து தப்பிக் கொள்ள ஆவியிலும், சரீரத்திலும் ஞானமுள்ளவர்களாயிருப்பது அவசியம். இவ்வுண்மையைத்தான் பவுலடியார் எபேசியருக்கு இவ்விதம் எழுதியுள்ளார். ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போல கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாத வைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் (எபேசியர் 5:15,16) என்று.

இந்த ஞானம் நோவாவுக்கு இருந்தது. ஆனால், நோவாவின் நாட்களில் வாழ்ந்த எண்ணிலடங்காத மக்களுக்கு மருந்துக்குக் கூட இல்லாமல் போனது. ஆம், 120 ஆண்டுகள் நோவா நீதியைக் குறித்துச் செய்த பிரசங்கம் அவர்களை ஏன் என்று கூடக் கேட்கவில்லை (2பேதுரு 2:5). இவர்கள் மனந்திரும்ப வேண்டுமென்று அந்நாட்களில் தேவன் நீடிய பொறுமையுள்ளவராயிருந்தார் (1பேதுரு 3:20) என்று பேதுரு குறிப்பிடுகிறார். ஆயினும், அவர்கள் ஆபத்திலிருந்தும், அழிவிலிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால், கர்த்தரின் கண்களில் கிருபையைப் பெற்றுக் கொண்ட நோவாவைக் குறித்து எபிரெயர் ஆசிரியர் கூறும்போது விசுவாசத்தினாலே நோவா தற்காலத்தில் காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான் அதினாலே அவன் உலகம் ஆக்கினைக் குள்ளானதென்று தீர்த்து விசிவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்திரவாளியானான் (எபிரெயர் 11:7).

நோவா ஏன் காப்பாற்றப்பட்டான், மற்றவர்கள் ஏன் அழிக்கப்பட்டார்கள் என்பதற்கான காரணங்களை பேதுருவும், எபிரெயர் ஆசிரியரும் இப்படியாக நமக்கு வெளிப்படுத்துகின்றனர். ஆம், நோவாவிற்குப் **பயபக்தி** இருந்தது. நோவா காலத்து மக்களுக்கு **அவபக்தி** இருந்தது (2பேதுரு 2:5) காப்பாற்றப்படுவதற்கும், அழிக்கப்படுவதற்கும் இது போதாதா ?

அருமையானவர்களே! ஆபத்து, அழிவு சம்பந்தமாக நாம் எப்படிப்பட்ட மனநிலை கொண்டவர்களாக உள்ளோம்? வரப்போகும் இறுதி நியாயத் தீர்ப்பு குறித்து அதே பேதுரு நம்மை ஆவியானவர் மூலம் எச்சரித்துள்ளார். **கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும் ; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள**

**கிரியைகளும் எரிந்து, அழிந்துபோகும். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்** (2பேதுரு 3:10,11) என்று.

எப்படி நோவா காலத்து மக்கள் ஜலப்பிரளயத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ளுவதற்கான வழியைத் தேவன் நோவாவின் நீதிப் பிரசங்கத்தின் மூலம் வைத்தாரோ அதுபோல, வரப்போகும் நியாயத் தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள நமக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலம் தந்துள்ளார். அச்சுவிசேஷம் எல்லா மனிதருக்கும் இரட்சிப்பை அருளத்தக்கது (தீத்து 2:11). இந்த சுவிசேஷத்தின் மூலம் இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது (ரோமர் 1:16). கிறிஸ்துவானவர், இந்த நற்செய்தியைத் தான் உலகமெங்கும் பிரசங்கிக்கும்படி சொன்னார் (மாற்கு 16:15,16). ஆக, ஒருவன் நோவாவைப் போல் பக்தியுள்ளவனாக நடந்து, கிறிஸ்துவின் உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்தால் நரகாக்கினையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளமுடியும்.

## II. விசுவாசத்தோடு செயல்படுவதற்கான அழைப்பு

**வானவில் நோவா**வுக்குப் பேழைக்குள் வரும்படியான அழைப்பு நமக்குக் கற்றுக்கொடுக்கும் இரண்டாவது பாடம், தேவ காரியத்தில் நாம் விசுவாசத்தோடு செயல்பட வேண்டும் என்பது.

விசுவாசம் பற்றி எபிரெயர் ஆசிரியர் ஓங்கி ஒரே போடாகப் போட்டுவிட்டார். **விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் என்று** (எபி.11:6).

விசுவாசக் காரியத்தில் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமிற்குத் தான் எவ்விதத்திலும் சளைத்தவன் அல்ல என்ற தொனியில் தான் நோவாவின் விசுவாசச் செயல்பாடுகள் இருந்துள்ளது. எபிரெயர் ஆசிரியர், **காணாதவைகளைக் குறித்துத் தேவ எச்சரிப்புப் பெற்று** என்று எழுதியுள்ளார். உலகம் உண்டானது முதல் நோவாவின் நாட்கள் வரை **மழை, ஜலப்பிரளாயம்** போன்ற வார்த்தைகள் உலகம் கேட்டிராதவைகள். அது பற்றிய அறிவோ, புரிந்துகொள்ளுதலோ யாருக்கும் கிடையாது. ஆயினும், கர்த்தர் எச்சரித்தபோது நோவா மறுபேச்சுக்கு இடம் கொடுக்கவில்லை. நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய்து முடித்தான் என்று பார்க்கிறோம் (ஆதி 6;22). விசுவாசத்திற்காக ஆபிரகாமை மேற்கோள் காட்டும் எத்தனை பேர், அதே விசுவாசத்திற்காக நோவாவை மேற்கோள் காட்டுகிறோம். ஆபிரகாமுக்குத் தன் வாழ்வில் ஆபேல், நோவா போன்றவர்களின் விசுவாசம் பற்றிக் கேள்விப்பட்டிருக்க வாய்ப்பிருந்தது.

ஆனால், நோவாவுக்கோ ஆபேல் பற்றிக் கொஞ்சம் அறிந்து கொள்ள வாய்ப்பிருந்ததைத் தவிர வேறு எந்த முன்னுதாரணமும் இருக்கவில்லை. ஆயினும், காணாதவைகளை விசுவாசித்துக் கீழ்ப்படிந்துள்ளான்.

அருமையானவர்களே! விசுவாசக் காரியத்தில் நாம் எப்படிப்பட்டவர்களாயுள்ளோம். பரத்திற்கான வாழ்க்கையில் நாம் எந்த இடத்தில் உள்ளோம்? இன்றைய கிறிஸ்தவம் நோவாவுக்கு நேர் எதிர் திசையில் நின்று, கண்ணில் காண்பவைகளைத்தான் விசுவாசிக்க விரும்புகிறது. ஆகவே தான், பொய்ப் போதகர்கள் பெருகிக் கொண்டே போகிறார்கள். தங்களால் முடியாதவைகளையும், நடக்கக் கூடாதவைகளையம் துணிந்து பேசி, அதோ அங்கே பாருங்கள், இதோ இவர்களைப் பாருங்கள், அங்கு நடந்திருக்கிறது, இப்படி நடந்திருக்கிறதென்று நம்பவைத்து மக்களை வஞ்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும், நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க வேண்டுமென்றே போதிக்கப்படுகிறோம். பக்தி காரியங்களில் இப்படிப்பட்ட மனோபாவத்துடன் இருப்பதை தேவனும், இயேசுவும் ஒரு போதும் ஏற்றுக்கொள்வதில்லை. ஆம், இப்படிப்பட்ட எண்ணம் கொண்டிருந்த தோமாவை இயேசு ஆண்டவர் ஒரு சமயம் கண்டித்ததோடு, **காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்களே பாக்கியவான்கள்** என்றார் (யோவான் 21:29). இப்படிப்பட்ட வார்த்தைகளை நம்மைப்போல் அறிந்து கொள்வதற்கு எவ்விதத்திலும் வாய்ப்பு பெறாத நோவா, இயேசுவின் கூற்றுப்படி, அந்நாட்களில் பாக்கியவானாக வாழ்ந்துள்ளான்.

ஆகவே, நாமும் நம்முடைய நாட்களில் பாக்கியவான்களாக இருப்பதற்கு தேவனையும், தேவசித்தத்தையும், தேவ குமாரனாகிய கிறிஸ்துவையும், அவருடைய புதிய ஏற்பாட்டு உபதேசத்தையும் முழுமனதோடு விசுவாசித்து நடக்கிறவர்களாக இருக்கவேண்டும். இயேசு ஆண்டவர், பிரதான கட்டளையில், **விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்** (மாற்கு 16:16) என்று கூறியுள்ளதை நினைவில் கொள்ளவேண்டும். ஆகவே, நாம் ஒவ்வொருவரும், தேவனையும், அவருடைய குமாரனையும் விசுவாசித்து, கடந்தகாலப் பாவங்களிலிருந்து மனந்திரும்பி (அப். 2:38), இயேசுவைத் தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு (ரோமர் 10:9,10) பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுவோம் (அப்.8:38, 22:16). அத்தோடு இந்த விசுவாசச் செயல்பாடு இறுதிவரை நிலைத்திருக்கும்படியாகவும் பார்த்துக்கொள்ளுவோம்(மத்தேயு 10:22).

### III. முழுக் குடும்பத்துக்குமான அழைப்பு

**வானவில் நோவா**வுக்குப் பேழைக்குள் வரும்படியான அழைப்பு நமக்குக் கற்றுக் கொடுக்கும் இன்னுமொரு பாடம், இரட்சிப்பின் காரியங்களில் முழுக் குடும்பமும் இணைந்து கீழ்ப்படிந்து செயல்பட வேண்டுமென்பது.

சர்வவல்ல தேவனால் ஏற்படுத்தப்பட்ட மூன்று ஸ்தாபனங்களின் வரிசையில் முதன்மையானது குடும்பமே. அடுத்தது தேசம். அதற்கடுத்தது சபை. தேசத்துக்கும், சபைக்கும் ஆதாரமாகவும், பலமாகவும் இருப்பது குடும்பமே. ஆதியிலே, ஆதாமையும், ஏவாளையும் படைத்த தேவன், அவர்களை இணைத்து, குடும்பத்தைத்தான் முதலாவது ஏற்படுத்தினார். முற்பிதாக்களின் நாட்களில் தேவன் குடும்பங்களின் தேவனாகவே இருந்துள்ளார்.

அந்த நல்ல தேவன், நோவா மாத்திரமல்ல, அவன் குடும்பமும் அழிவிலிருந்து காப்பாற்றப்பட விரும்பினார். ஆயினும், யோசேப்பினிமித்தம் எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தது போல (ஆதி 39:5), **நோவாவினிமித்தம்** அவன் குடும்பம் முழுவதையும் இரட்சித்திருக்க மாட்டார். அப்படியிருந்திருக்குமானால், சோதோம் கொமொராவைத் தேவன் அழிக்கும்போது, நீதிமானாகிய லோத்துவினிமித்தம் அவன் மருமக்கள்மார்களையும் அவர் காப்பாற்றியிருக்க வேண்டும் (ஆதி.19:14). மருமக்கள்மார்கள் லோத்தின் வார்த்தைகளுக்குச் செவிகொடாதே போனபடியால் அழிக்கப்பட்டார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? நோவாவின் குடும்பத்தாரும் அவன் செய்த பிரசங்கத்திற்குச் செவிகொடுத்திருக்கிறார்கள் என்பது தானே.

பரலோகத்தின் தேவன் குடும்பங்களை நேசிக்கிறார். குடும்பம் முழுவதும் தனக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதில் அக்கறை கொள்கிறார். புறவினத்தானான கொர்நேலியு இரட்சிக்கப்பட்ட சம்பவத்தால் அதிருப்தியுடனிருந்த யூதக் கிறிஸ்தவர்களுக்கு கொர்நேலியுவின் வீட்டில் என்ன நடந்தது என்பதைப் பேதுரு வரிசையாய் விளக்கிக் காட்டின போது, **நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான் என்று அந்தத் தூதன் தனக்குச் சொன்னதாகவும் எங்களுக்கு அறிவித்தான்** என்று வெளிப்படுத்தினார் (அப். 11:14). கொர்நேலியு என்ற தனி மனிதனின் ஜெபங்களும், தருமங்களும் தேவ சமூகத்தை எட்டியிருந்த போதிலும் (அப். 10:4). அவன் மாத்திரம் இரட்சிக்கப்பட்டால் போதும் என்று தேவன் எண்ணாமல், அவன் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாகவே தேவன் விரும்பியுள்ளார். அதுபோல, லீதியாளும் அவள் வீட்டாரும் இரட்சிக்கப்பட்டார்கள் என்றே அப்.11:15-ல் வாசிக்கிறோம். இன்னும், பிலிப்பி சிறை அதிகாரி ஆண்டவமாரே இரட்சிக்கப்படுவதற்கு **நான் என்ன செய்ய வேண்டும்** என்று கேட்டதற்கு, பவுலும், சீலாவும் **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்** என்று சொல்லி, அவனுக்கும், அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்திருக்கிறார்கள் (அப்.16:30,31).

அன்பானவர்களே! நோவாவின் குடும்பம் காப்பாற்றப்பட்டதும், மேலே உள்ள **குடும்பங்கள் இரட்சிக்கப்பட்டதும்** நமக்கு என்ன சொல்லுகிறது? தமக்குப் பயப்படுகிற ஒவ்வொரு ஆத்துமாவும்

இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிற தேவன், அவர்களின் குடும்பத்தாரும் இரட்சிப்புக்குள் வரவேண்டுமென்றே எதிர்பார்க்கிறார். இந்த உண்மையை யோசுவா புரிந்து வைத்திருந்தபடியால்தான், **நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்** என்று அந்நாட்களிலேயே சூளுரைத்தார் (யோசுவா 24:15).

அப்படியானால், அருமையானவர்களே! நம்முடைய தனிப்பட்ட நிலை எப்படியுள்ளது? நம்முடைய குடும்பத்தின் நிலை எப்படியுள்ளது? குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்து இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களா? சிந்திப்போம். தான் முன்மாதிரியாக வாழ்ந்து, தன் குடும்பம் முழுவதையும் இரட்சிப்புக்குள் கொண்டுவரும் முயற்சியில் வெற்றிபெற ஒரு நோவாவால் முடியுமானால், ஒரு யோசுவாவால் சாத்தியமாகுமானால், ஒரு கொர்நேலியுவினால் வழிநடத்தமுடியுமானால், நம்மாலும் முடியும். இந்த தேவமனிதர்களுடைய குடும்ப வெற்றியின் இரகசியம், அவர்கள் தனிப்பட்ட வாழ்வில் பெற்ற வெற்றியில் தான் அடங்கியிருக்கிறது. ஆகவே, மனைவி, பிள்ளைகள் என் பேச்சை மதிப்பதில்லை, என் சொல்லுக்குக் கீழ்ப்படிவதில்லையென்றெல்லாம் குறைசொல்லிப் புலம்புவதை நிறுத்திவிட்டு, தேவச்சித்தத்திற்குக் குடும்பத்தலைவர்களாயிருக்கிற நாம் நம்மைச் சமூலமாக ஒப்புக்கொடுப்போம். ஆம், முதலாவது நாம் நம்குடும்பத்தை வானவில் நோவா போல், தேவன் சொல்லுகிறவைகளுக்குக் கீழ்ப்படிந்து, பிறகு, கீழ்ப்படிதலுக்குள்ளாக வழிநடத்துவோம். தேவன் இதிலே பிரியப்படுகிறார். அப்படிப்பட்ட குடும்பங்களைத் தேவன் அபரிதமாக ஆசீர்வதிப்பார்.

**தேவ சமாதானம் உங்களோடிருப்பதாக! ஆமென்** ★

# பிரசங்கம் எதற்காக அல்ல

1. தன்னைப்பற்றி விளம்பரப்படுத்துவதற்கு அல்ல (1கொரி. 4:5)
2. கல்வி ஞானத்தை வெளிப்படுத்துவதற்கு அல்ல (1கொரி. 2:1-5)
3. பொழுது போக்குவதற்கு அல்ல (2கொரி. 2:2)
4. மனிதரால் புகழப்படுவதற்கு அல்ல (2கொரி. 4:9 13)
5. ஆதாயம் தரும் ஒரு தொழில் செய்வதற்கு அல்ல (2கொரி. 4:12)
6. வெளிப்படுத்தப்படாதவைகளைப் பேசுவதற்கு அல்ல (கலா. 1:7-9)
7. கூட்டியும், குறைத்தும் போதிப்பதற்கு அல்ல (வெளி. 22:18,19)

# மாய வித்தைக்காரனான சீமோனுக்கு பரிசுத்த ஆவியின் வல்லமை மறுக்கப்பட்டது ஏன்?

Bro. J.C. சோட்

சமாரிய நாட்டு மக்களுக்குக் கிறிஸ்துவைப் போதிக்க பிலிப்பு எவ்வாறு சமாரியாவுக்குச் சென்றான் என கடந்த பாடத்தில் பார்த்தோம். அச் சம்பவத்தின் சுருக்கத்தை இங்கு தருவதைவிட, வசனப்பகுதியைப் படித்து என்ன நடந்தது எனக் காண்போம்: "பிலிப்பு செய்த அதிசியங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு, கண்டு அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப்புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. சீமோன் என்று பேர் கொண்ட ஒரு மனிதன் அந்தப் பட்டணத்திலே மாயவித்தைக் காரரானாயிருந்து, தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரியா நாட்டு ஜனங்களை பிரம்மிக்கப் பண்ணிக் கொண்டிருந்தான். தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று எண்ணி, சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவி கொடுத்து வந்தார்கள். அவன் அநேக காலமாய்த் தன்னுடைய மாயவித்தைகளினாலே அவர்களைப் பிரம்மிக்கப் பண்ணினதினால் அவனை மதித்து வந்தார்கள். தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்பொழுது சீமானும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப் பற்றிக் கொண்டு அவனால் நடந்த அடையாளங்களையும், பெரிய அற்புதங்களையும் கண்டு பிரம்மித்தான். சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக் கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும், யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றான். பேதுரு அவனை நோக்கி: வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோட கூட நாசமாய்ப் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு

முன்பாகச் செம்மையாக இராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்கும் இல்லை பாகமுமுல்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள், ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும், பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன்: நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றான். இவ்விதமாய் அவர்கள் கர்த்தருடைய வசனத்தைச் சாட்சியாய் அறிவித்துச் சொன்ன பின்பு, சமாரியருடைய அநேக கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள் (அப்.8:6-25).

வசனத்தின் நீளமான ஒரு தொடராக இது இருந்தபோதிலும் என்னதான் நடந்தது என்பது பற்றிய துல்லியமான முழு விவரத்தையும் உங்கள் முன்பு கொண்டு வர விரும்பினேன்.

முதலில், பிலிப்பு என்ற பிரசங்கி சமாரியாவுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு கிறிஸ்துவை அறிவித்தார். அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை அளித்த ஏழு பேர்களில் பிலிப்பும் ஒருவர், இந்த வல்லமையைக் காட்ட, தனது போதகப் பணியுடன் கெட்ட ஆவிகளை விரட்டுவது போன்ற பல அற்புதங்களையும் அவர்களிடத்தில் செய்தான்.

இவை அனைத்தின் விளைவாக, தேவனின் இராஜ்ஜியத்தைப் பற்றிய காரியங்களை பிலிப்பு போதித்த போது, பலர் விசுவாசித்து, ஆணும் பெண்ணுமாக இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே திருமுழுக்குப் பெற்றனர்.

சமாரியர்கள் மத்தியிலே செல்வாக்கான ஒரு மனிதன் அங்கிருந்தான். அவன் மாயவித்தைக்காரனான சீமோன் என்பவன். மக்கள் அனைவரும் அவனைப் பெரிய மனிதன் என எண்ணும் அளவிற்கு அவன் எல்லாரையும் ஏமாற்றி வைத்திருந்தான். இப்போது நற்செய்தியைக் கேட்டு, அற்புதங்கள் செய்யப்படுவதையும் கண்ட பின்னர் அவனும் தேவனுக்குக் கீழ்படிய விரும்பி அவ்வாறே செய்தான்.

அந்த சமயத்திலே எருசலேமில் தங்கியிருந்த அப்போஸ்தலர்கள் வரை இந்தச் செய்தி எட்டியது. எனவே, பேதுருவும் யோவானும் அம்மக்களுக்காக ஜெபம் பண்ணவும், கைகளை அவர்கள் மேல் வைத்து பரிசுத்த ஆவியை அவர்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாகவும் சமாரியாவுக்குச் சென்றான். சீமோன் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றவர்களின் எண்ணிக்கையில் ஒருவனாக இல்லை. ஆனால், அங்கு நடந்தவற்றிற்கு அவன் சாட்சியாக இருந்தான். தானும் பரிசுத்த ஆவியின் வல்லமையை அடையத்தக்கதாக, அப்போஸ்தலர்கள் தன்மேல் கைகளை வைக்க வேண்டுமென அவர்களிடம் வேண்டிக் கொள்ளுவதற்குப் பதிலாக

அவர்களுக்குப் பணம் கொடுக்க முன்வந்தான். ஒருவேளை, அவன் தேவைகளைப் பெற்றுக் கொள்ள, சம்மந்தப்பட்டவர்களுக்கு லஞ்சம் கொடுப்பது அவனுக்கு மிகவும் பழக்கமான ஒரு செயலாக இருந்திருக்கும். எனவே, வழக்கம் போல, அதே முறையைப் பின்பற்றி இந்த வல்லமையைப் பெற அப்போஸ்தலர்களுக்கு லஞ்சம் கொடுக்க முன் வந்துள்ளான். ஏற்கனவே, அவனுடைய மாயவித்தைகள் அல்லது மந்திர தந்திங்கள் வழியாக மக்கள் மத்தியில் பெரிய மனிதனாகக் காட்சியளிப்பவன், இந்தப்பரிசுத்த ஆவியின் வல்லமையையும் பெற்றுக் கொண்டால் உண்மையிலேயே பெரிய மனிதனாக மாறிவிடலாம் என்று அவன் எண்ணினான்.

அப்போஸ்தலர்களுக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற போது, சீமோன் அவர்களிடம், “நான் எவன் மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றான்” அந்த வல்லமையை தான் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று எண்ணியதோடு மட்டுமல்லாமல், அதை பிறருக்குக் கொடுக்கக் கூடிய சக்தியும் தனக்குக் கிடைக்க வேண்டுமென்று அவன் எண்ணினான். இந்த மாதிரியான தவறுகள் நேருமென்ற காரணத்திற்காகத்தான், இப்படிப்பட்டவர்களுக்கு, பிறருக்கு வல்லமையை அளிக்கும் வரம் கொடுக்கப்படவில்லை. அவ்வாறு மற்றவர்களுக்கு அந்த வல்லமையை அளிக்கும் சக்தியை அவர்கள் அடைந்திருப்பார் களேயானால், லஞ்சம் பெற்றுக்கொண்டு அதைப் பிறருக்கு அளிக்கும் சோதனையையும் அவர்களுக்கு வந்திருக்கும் அல்லது அந்த வல்லமையின் முக்கியத்துவம் எதுவும் அறியாது, அவர்களுடைய நண்பர்கள், உறவினர்கள் என எல்லோருக்கும் கொடுத்திருப்பார்கள்.

ஆனால், சீமோனின் லஞ்சம் கொடுக்கும் முயற்சி பலிக்கவில்லை. **பேதுரு, அவனை நோக்கி தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாகப் போகக்கடவது** என்றான் (அப்.8:20). எனவே, இது அனைத்தும் நடக்கும் விதத்தை முற்றிலும் அவன் தவறாகப் புரிந்து கொண்டதைப் பற்றியும், தேவனுடைய வரத்தை நிச்சயமாகப் பணத்தால் பெற்றுக் கொள்ள முடியாது என்பதையும் குறித்துப் பேதுரு அவனுக்கு விளக்குகிறார். பின்னர், அவனைக் கண்டிக்கிறார்; அவனுடைய இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாக இராதபடியால் அவனது துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, அவனுடைய இருதயத்தின் எண்ணம் மன்னிக்கப்பட, தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளச் சொல்லுகிறார். **நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருப்பதாகக் காண்கிறேன்** என பேதுரு சொல்லுகிறார் (அப். 8:23). வேறு விதமாகக் கூறினால், அவன் எவ்வளவு கீழ்த்தரமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு தூரத்திற்குச் சென்று பெரும் குற்றமிழைத்திருந்தான்.

நற்செய்தியைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்திருந்தபடியால், சீமோனிடம் பேதுரு இதைச் சொல்ல முடிந்தது. அதாவது, சபையில் ஒரு அங்கத்தினராகவும் கிறிஸ்தவனாகவும் இருந்தது. பாவஞ்செய்திருந்த படியால், மீண்டுமாக நற்செய்திக்கு அவன் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லாதிருந்தது. அவன் தன்னுடைய பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பி, தனது பாவத்தை மன்னிக்க தேவனிடம் வேண்டுவது அவனுக்குப் போதுமானதாக இருந்தது. பேதுரு கடிந்து கொள்ளும்போது, சீமோன் ஆத்திரப்படாமல் தனது குற்றத்தை உணர்ந்தவனாக, **பேதுருவை நோக்கி : நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு எனக்காக கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றான்** (அப். 8:24). அதன் பின்னர், பேதுருவும் யோவானும் எருசலேமுக்குத் திரும்பினார். பிலிப்பு வேறு பக்கமாச் சென்றான். சீமோனுடைய நிலை என்ன? பேதுரு அவனைக் கண்டித்து, பின்னர் அவனுடைய பாவம் மன்னிக்கப்பட தேவனிடத்தில் வேண்டிக்கொள் எனக் கேட்டுக் கொண்ட போது, சீமோன் தனது பாவத்தை ஒப்புக் கொண்டு தன் பேரில் அவ்வித காரியங்கள் எதுவும் நேரிடாதபடி தனக்காக ஜெபம் செய்ய பேதுருவிடம் கேட்டுக் கொண்டதாலும், நிச்சயமாக தனது முந்தைய நிலைக்குத் திரும்பி, இப்போது மீண்டுமாக சீமோன் ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக இருக்கவேண்டுமென்று நாம் யூகித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அப்படியானால், அதன் பின்னர் அப்போஸ்தலர்கள் தங்களுடைய கைகளை சீமோன் மேல் வைத்துப் பரிசுத்த ஆவியின் வல்லமையை அவன் பெற்றுக் கொள்ளச் செய்தார்களா? இல்லை. அதைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. என்றாலும் அவனைப் பொறுத்த வரையில் பரிசுத்த ஆவியின் வல்லமையை அவன் பெற்றுக் கொண்டிருந்தால், அதைத் தவறாகப் பயன்படுத்தும் சோதனையிலிருந்து மீண்டிருப்பானா என்பது ஒரு கேள்வி. ஓர் அறிஞர் கூறியது போல **ஒரு வங்கியை கொள்ளையடித்ததற்காக ஒருவன் மனஸ்தாபப்படும் போது அவனை மன்னிக்கலாம்; அதற்காக அதே நபரை அந்த வங்கியில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும் காசாளர் பதவியில் அமர்த்த முடியாது**.

கைகளை வைத்துப் பரிசுத்த ஆவியானவரைப் பெறும் அளவானது, ஒருவனுடைய இரட்சிப்புக்குக் கொஞ்சமும் சம்பந்தப்பட்ட காரியம் அல்ல. ஆனால், அந்த நாட்களிலே கர்த்தரின் காரியங்களை தீவிரமாகக் கவனிக்கும் ஊழியத்தைச் செய்ய, அப்போஸ்தலர்களால் கைகளை வைத்துப் பரிசுத்த ஆவியின் வல்லமையை பெற்றுக்கொள்ள கர்த்தரின் சில மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இன்று அவ்வாறான அற்புத அடையாளங்களை நாம் சார்ந்திருக்க வேண்டியதில்லை. ஏனென்றால், தேவனின் விருப்பத்தை, வீழ்ந்து போன உலகத்திற்கு நாம் அறிவிக்கச் செல்லும்போது, நமக்கும் சகல மக்களுக்கும் அதை வெளிப்படுத்த புதிய ஏற்பாடு கொடுக்கப்பட்டிருக்கிறது. ★

பெண்கள் பகுதி

# புதிய ஆண்டில் புது வாழ்வு

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஸ்தோத்திரங்கள்.

புதிய வாழ்வு என்று நான் சொல்லும்போது அது **கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு**. ஒரு கிறிஸ்தவன் பாவத்திற்கு மரித்தவன் (மனந்திரும்புதல்) ஞானஸ் நானத்தின் மூலமாக இயேசுவுடன் அடக்கம் பண்ணப்பட்டு புதிய வாழ்க்கைக்காக எழும்பினவன் (ரோ:6:4). பாவத்திற்கு மரித்து கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் விட்டு வந்த பாவம் நமக்கு ஒரு தொல்லையாகவே இருந்து கொண்டிருக்குமா?

**ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்கு கீழ்ப்படியத் தக்கதாக, சாவுக் கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக; நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்** (ரோமர் 6:12,13).

நாம் மனந்திரும்பினதினாலே தேவன் நம் பாவங்களை ஞானஸ்நானத்தின் மூலம் கழுவினார் (அப்.22:16). கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே அங்கமாக்கப்பட்டோம் (2:47). நித்திய ஜீவன் கொடுத்திருக்கிறார் (எபி.5:9). அவருடைய வாக்குத்தத்தத்தின் மேல் விசுவாசம் வைக்கிறோம் (கொலோ.2:12). இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால் பிரியமானவர்களே மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மை சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக் கடவோம் (2கொரி.7:1).

அப்போஸ்தலன் பவுல் (கொலோ. 3:1-17)-ல் ஒருவன் தன் ஆடைகளை மாற்றுவதற்கு ஒப்பிட்டுக் கிறிஸ்தவ வாழ்க்கையைப் பேசுகிறார். நாமே சிந்தித்துப் பார்க்கலாமே ஒரு வயலில் ஒருவன் நாள் முழுவதும் வேலை செய்து வேர்த்துப்போய் தன் ஆடைகள் அழுக்கடைந்து, பிறகு, மாலை வீடு திரும்பியவுடன் முதல் வேலையாக தன் அழுக்கு ஆடைகளை கழற்றி, சோப்புத் தண்ணீரால் குளித்துத் தன்னை தூசுகள் போகக் கழுவி, வேறு ஆடையை மாற்றிக்கொள்வான். அதேபோல் நாமும், பாவத்திற்காக மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பின்பு

பழையதைக் களைந்து இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படுகிறோம். மீண்டும் அந்த அழுக்குத் துணியை அணிய விரும்புவோமா? கட்டாயம் இல்லை. நீதியின் வஸ்திரம் தரித்தவர்களாய் இருப்போம் (1பேதுரு 2:9).

நம்முடைய சிந்தனைகள் மாற வேண்டும் (2கொரி.10:5). பரத்துக்கேற்ற காரியங்களை சிந்திக்கிறவர்களாக இருக்க வேண்டும். அழுக்குத் துணிபோல் இருக்கிற சில குணங்களை பவுல் பட்டியலிட்டுக் காட்டுகிறார். சில காரியங்களைச் செய்யும் அவயவங்களை **அழிந்து போகும்படி** சொல்லுகிறார். (கொலோ. 3:5). 8-ம் வசனத்தில் **விட்டுவிடும்படியாக** சிலவற்றைக் கூறுகிறார். 9-ம் வசனத்தில் **களைந்து போடும்படியாக** அறிவுறுத்துகிறார். பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் **தரித்துக் கொள்ளும்படி** 10-ம் வசனத்தில் குறிப்பிடுகிறார்.

உலகமக்களின் மனோபாவம் இருக்கிறபடியாக நம்முடைய மனது இருக்கக் கூடாது. கோபத்தை அடக்க வேண்டும். என்ன பேசுகிறோம் என்பதை யோசித்துப் பேச வேண்டும். நல்ல சுத்தமான ஆத்துமாவிலே கெட்ட வார்த்தை பேசும் வாய் இருக்கக் கூடாது. நம் நாவைப் பயன்படுத்தி கறைப்படுத்தும் பேச்சு, ஏமாற்றும் பேச்சு இவைகளைப் பேசக்கூடாது. உண்மையாலுமே சத்தியத்திற்கு தங்களை ஒப்புக் கொடுத்தவர்கள் பொய் பேச மாட்டார்கள்.

ஏதோ பழையதைக் களைந்து போடுவது மாத்திரம் கிறிஸ்தவம் ஆகாது. புதியவைகளைத் தரித்துக் கொள்ள வேண்டும். **தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், பரிசுத்தத்தையும், நீடிய பொறுமையையும், தரித்துக்கொண்டு ஒருவரை யொருவர் தாங்கி ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால் கிறிஸ்து நமக்கு மன்னித்தது போல ஒருவருக் கொருவர் மன்னிக்க வேண்டும். பூரண சற்குண த்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ள வேண்டும். நன்றியறிதலுள்ள வர்களையுமிருக்க வேண்டும் (கொலோ. 3:12-15).**

ஒருவர் தன்னை மாற்றிக் கொள்வதென்பது அவ்வளவு லேசானதல்ல. பெருமையை மாற்றித் தாழ்மையான இருதயத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு கிறிஸ்தவன் புதியவன். கிறிஸ்துவோடு மாத்திரமல்ல. சக மனிதர்களோடும் நம் கிறிஸ்தவத்தைக் காட்ட வேண்டும். குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக இருப்பதற்காகவே நம்மை முன் குறித்திருக்கிறார். (ரோமர் 8:29). நீதிக்காக துன்பப்படுகிறவர்களாக இருக்க வேண்டும். ( பேதுரு 2:21-24).

மேலும், பூமிக்குரிய உறவுகளிலும் நம் வாழ்க்கை புதிதாக இருக்க வேண்டும். நல்ல கணவன், மனைவியாக (கொலோ. 3:18-21 ; எபே. 22:23), நல்ல வேலைக்காரர்களாக நல்ல எஜமானாக (கொலோ. 3:22 ; 4:1). நல்ல பிரஜைகளாக (1பேதுரு 2:13 17) இருக்க வேண்டும்.

2கொரி. 5:17-ல் பார்க்கிறபடி, **ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின.** கிறிஸ்தவனாக இருப்பது எவ்வளவு மகிமையானது!

நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதினால் அநேக ஆசீர்வாதங்கள் இருக்கின்றன. அதைவிட மேலாக நாம் செய்ய வேண்டிய கடமைகள் இருக்கின்றன. முதலாவதாக தேவனை நாம் எதற்கெடுத்தாலும் முதன்மையாக வைக்க வேண்டும். (லூக்கா 14-26-33 ; மத். 22:37-39). இரட்சிப்பு நிறைவேற பயத்தோடும், நடுக்கத்தோடும் வேலை செய்யவேண்டும் (பிலி 2:12). பிறகு, நம்மைப் போல் பிறரையும் நேசிக்க வேண்டும் (மத். 22:39).

பிரியமான சகோதரிகளே இப் புதிய ஆண்டை காணக் கிருபைசெய்த தேவன் புதிய வாழ்க்கைக்கான வழி முறைகளையும் வசனத்தில் நமக்குக் கொடுத்திருக்கிறார். காலத்தை வீணாக்க வேண்டாம். புதிய காரியங்களைப் பார்த்தோம். நித்திய அழிவினின்று பிறரை மீட்போம். நாமும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளப் பாடுபடுவோம்.

தேவன் உதவி செய்வாராக! ஆமென். ★

# இயேசுவும், புறக்கணிப்பும்

**1.** அவருடைய தெய்வீகத் தன்மை புறக்கணிக்கப்பட்டது (லூக்கா 1:35; யோவான் 3:16;5:2).

**2.** அவருடைய அதிகாரம் புறக்கணிக்கப்பட்டது (மத். 28:28; யோவான் 5:26,27;12:48).

**3.** அவருடைய நாமம் புறக்கணிக்கப்பட்டது (பிலி. 2:8,9; அப். 11:26; கொலோ.3:17).

**4.** அவருடைய சபை புறக்கணிக்கப்பட்டது (மத் 16:18;அப்.20:28; எபே. 5:23-27).

**5.** அவருடைய சுவிசேஷம் புறக்கணிக்கப்பட்டது (மாற்கு 16:15, 16; ரோமர் 1:16; கலா. 1:6,7).

**6.** அவருடைய ஆராதனை புறக்கணிக்கப்பட்டது (யோவான் 4:24; அப். 2:42; கொலோ. 3:16.)

# ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன்

சகோ. பென்னி மார்ட்டீன்

பிரியமான வாலிப உள்ளங்களுக்கு எனது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். பிரியமானவர்களே பொதுவாக நாமெல்லோரும் தேவன் நமக்கு ஒவ்வொரு புது வருடத்தைத் தரும் போதும் அடுத்த வருடத்தையும் நாம் காணும்படி அவர் நமக்கு ஜீவனைத் தர வேண்டும் என்று வாஞ்சிக்கிறோம், ஏங்குகிறோம். வேறுவிதமாகச் சொன்னால், நாம் இவ்வுலகில் அதிக ஆண்டுகள் வாழ ஆசைப்படுகிறோம். அப்படி ஜீவனை விரும்பி நல்ல நாட்களை காணவேண்டு மென்றிருப்பதை வேதாகமம் தவறு என்றோ பாவம் என்றோ கூறுவதில்லை. மாறாக, அதற்கென்று தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிற காரியங்களைச் செய்ய வேண்டுமென்று தான் வலியுறுத்துகிறது. புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பேதுரு இதைப் பற்றிச் சொல்லும்போது **ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும் கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி நன்மை செய்து சமாதானத்தைத் தேடி அதைப் பின் தொடரக்கடவன்** என்று புத்திச் சொல்கிறார் (1பேதுரு3:10,11).

அப்போஸ்தலனாகிய பேதுருவால் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிற இந்தச் சிந்தையை ஈர்க்கும் வாக்கியத்தைக் கவனித்துக் கூடுதலான தகவல்களுக்காக அதை ஆராய்ச்சி செய்யாமல் யார் தான் கடந்து போவார்? வேறுவிதமாகச் சொன்னால் அதிக நாட்கள் வாழ யாருக்குத் தான் ஆசை இல்லை? நல்ல நாட்களை யார் தான் விரும்புவதில்லை? இப்பாழாய் போன உலகில் பெரும்பாலும் நாம் பலவிதமான பாடுகள் பாடுகிறோம். பிரியமானவர்களே! இன்றைய நாட்களில் வாலிபர்கள், வயதானவர்கள் என்று எல்லோருமே ஆயுசு நாட்களை அதிகரிக்க என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்கிறார்கள். சமச்சீரான உணவு, உடற்பயிற்சி, தூக்கம் என்று எல்லாவற்றிலும் கவனம் செலுத்தினாலும் கூட கவலை என்னும் அழையா விருந்தாளி அதிக ஆயுசு நாட்கள் என்னும் கனவைக் கலைத்து விடுகிறது. அப்படியென்றால், ஆயுசு நாட்களை அதிகப்படுத்துவதற்கு என்னதான் வழி என்கிற மாபெரும் கேள்விக்கு தீர்வாய், அருமருந்தாய் அமைகிறது (1பேதுரு 3:10,11) வசனங்கள்.

### 1. ஜீவனை விரும்புதல்

இவ்வுலகில் பலர் ஜீவனை விரும்பாமல் இருப்பது துரதிஷ்ட வசமானது. வருடந்தோறும் லட்சக்கணக்கான மக்கள்

தற்கொலையினால் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். மற்றவர்கள் அந்த அளவுக்குப் போகாவிட்டாலும் கூட வாழ்க்கையை வெறுத்தவர்களாய், மகிழ்ச்சியற்றவர்களாய் இருக்கிறார்கள். இதில் வேதனைப் படவேண்டிய, வெட்கப்பட வேண்டிய காரியம் என்னவென்றால், வாழ்க்கையே வெறுத்து விட்டது என்று சொல்கிற கூட்டத்தில் தங்களைக் கிறிஸ்தவர் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களும் இருக்கிறார்கள் என்பதுதான். பிரியமான வாலிபக் கண்மணிகளே! இப்போது நாம் ஜீவனை விரும்ப எவைகள் காரணிகளாக அமைகின்றன அல்லது எவைகள் நம்மை ஊக்கப்படுத்துகின்றன என்று பார்ப்போம்.

★ முதலாவது, நாம் தேவசாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம் (ஆதியாகமம் 1:27)அவருக்குள் நாம் பிழைக்கிறோம் அசைகிறோம் இருக்கிறோம் (அப்போஸ்தலர் 17:28) ஆகவே, நாம் ஜீவனை விரும்ப முடியும்.

★ இரண்டாவது, நம் கண்ணீர் துடைக்க நம்மை விசாரிக்க ( 1பேதுரு 5:7) நம் ஜெபங்களுக்கு பதில் கொடுக்க தேவன் இருப்பதால் நம் ஜீவனை விரும்ப முடியும்.

★ மூன்றாவது, நாம் மரணத்தைத் தழுவும்போதுகூட ஜீவனை விரும்ப முடியும். ஏனென்றால், நம் சரீரம் ஒரு விதையைப்போல் மண்ணில் விதைக்கப்பட்டு ( 1தெச. 4:13) கண்ணீரில்லாத கவலையில்லாத தேசத்தில் (வெளி. 21:4) நம் ஜனத்தாரோடே சேர்க்கப்படும் அந்த நாளை எதிர்நோக்க முடியும் (ஆதியாகமம் 25:8).

எனவே, நாம் ஏன் இந்தப் பூமியில் பிறந்தோம் என்று வாழ்க்கையே வெறுத்தவர்களாய் நாம் பேசாமல் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஜீவனை எண்ணி வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் ரசித்து, ருசித்து கர்த்தருக்குள் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். தேவனுக்கு உடையவைகளாகிய நம் சரீரத்தினாலும் நம் ஆவியினாலும் தேவனை மகிமைப் படுத்த வேண்டும் ( 1கொரி. 6:20). பூமிக்குரிய கூடாரமாகிய நம் சரீரம் அழிந்து போனாலும் பரலோகத்தில் நமக்கு நித்திய வீடு உண்டு என்பதை உணர்ந்தவர்களாய் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் (2கொரி. 5:12).

**2. நல்ல நாட்களைக் காணுதல்**

நல்ல நாட்கள் என்றால் என்ன? கெட்ட நாட்கள் என்றால் என்ன? சில வாலிபர்கள் வெளிப்புற சூழ்நிலைகளை அளவுகோலாக எடுத்துக் கொண்டு இது நல்ல நாள், இது கெட்ட நாள் என்று தீர்மானித்துக் கொள்கிறார்கள். உதாரணமாக, அவர்கள் வாழ்க்கையில் எதையாவது சாதித்து விட்டாலோ, புதிய உயரங்களைத் தொட்டாலோ அல்லது செழிப்பான காலங்கள் வந்தாலோ அவைகளை நல்ல நாட்கள் என்றும் பொருளாதார மந்த நிலையில் இருக்கும்போதோ, வியாதியால் அவதிப்படும்போதோ அந்த நாட்களை கெட்ட நாட்கள் என்றும் வெளிப்புறமான சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்தே நாட்களை கணக்கிடுகிறார்கள்.

ஆனால், நம் வேதாகமத்தில் பார்க்கும்போது பவுலும், சீலாவும் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட போதும் நடு இராத்திரியிலே அவர்கள் ஜெபம் பண்ணி, சந்தோஷமாய் எப்படி தேவனைத் துதித்துப் பாடினார்கள் (அப்போஸ்தலர் 16:25). எப்படி அவர்களால் அப்படிச் செய்ய முடிந்தது? பவுலுக்கும் சீலாவுக்கும் அது நல்ல நாளாகத்

தான் இருந்திருக்கிறது. நமக்கு இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தால் வாழ்க்கையிலேயே மிக மோசமான அல்லது கெட்ட நாள் என்று முத்திரைக் குத்தியிருப்போம். எனவே, மகிழ்ச்சியான நல்ல நாட்களைத் தீர்மானிப்பது வெளிப்புறமான சூழ்நிலைகள் அல்ல, நம் மன நிலைதான். தேவன் தரும் எல்லா நாட்களையும் நாம் நல்ல நாட்களாகவே எடுத்துக்கொண்டு அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

**3. தீர்வு**

தேவதாசனாகிய பேதுரு ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் என்ன செய்ய வேண்டும் என்கிற கேள்விக்குப் பதிலாக அவைகளுக்குத் தீர்வாக (1பேதுரு 3:10,11) வசனங்களில் விளக்கம் கொடுத்துள்ளார். முதலாவது, ஒரு மனிதன் பொல்லாப்புக்குத்தன் நாவை விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார். நாவு என்பது ஒரு சிறிய உறுப்பாக இருந்து கொண்டு எந்த ஒரு பெரிய மனிதனையும் கட்டுப்படுத்துகிறது (யாக்கோபு 3:5-8). அது அடங்காததும் பொல்லாங்கானதும் தேவன் வெறுக்கிற ஏழு காரியங்களில் மூன்றைக் கொண்டதாகவும் இருக்கிறது. அதாவது, பொய், நாவு, அபத்தம் பேசும் பொய்சாட்சி சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் போன்றவைகள் அந்த மூன்று காரிய்ங்களாகும் (நீதிமொழிகள் 6:1719). இது மாத்திரமல்லாமல் பெருமை முகஸ்துதி வம்படைப்பு தவறான தகவல் அவதூறு போன்ற காரியங்களிலும் நாவின் பங்களிப்பு பல மடங்கு இருக்கிறது. பிரியமானவர்களே! இதுகாறும் நாம் நாவை அடக்குவதைப் பற்றி பார்த்தோம்.

அடுத்ததாக ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்பை விட்டு நீங்கி நன்மை செய்ய வேண்டும். பலர் அதிலும் குறிப்பாக நாங்களும் தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்பவர்கள் கூட இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ள சிரமப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது. தேவன் தம்முடைய பிள்ளைகள் பொல்லாப்பை தீமையை வெறுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார் (நீதி. 8:13). அதேபோல், நாம் நன்மையானவைகளை சக மனிதர்களுக்குச் செய்யும்போது, தேவனிடத்திலிருந்து நன்மையை எதிர்பார்க்க முடியும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நன்மை செய்கிறவராய் இவ்வுலகில் சுற்றித்திரிந்தார். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும் நாமும் நன்மை செய்கிறவர்களாய் இருக்க வேண்டும்.

கடைசியாக, பேதுரு ஆசிரியர் ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் சமாதானத்தைத் தேடி அதைப் பின் தொடரக்கடவன் என்று சொல்கிறார். இன்றைய நாட்களில் பலர் சண்டை பண்ணுகிறவர்களாகவும் அதையே பொழுதுபோக்காக கொண்டிருப்பவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால், நாம் சமாதானத்தைத் தேடி அதைப் பின்தொடர வேண்டுமென்று தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். இக்காரியத்தில் நாம் உலகத்தாருக்கு முன் உதாரணமாகத் திகழவேண்டும், வழிகாட்ட வேண்டும். ஏனென்றால், சமாதானம் பண்ணுகிற நாம்தான் பாக்கியவான்களாக, தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம்.

★

சிறுவர் பகுதி

# இயேசுவை மட்டும் நோக்குங்கள்

Bro. ஏபில் நாயகம்

எனக்குப் பிரியமான தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் எனது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புதிய ஆண்டில் தேவன் உங்களுக்கு சகல நன்மைகளையும் அருளும்படி நான் உங்களை வாழ்த்துகிறேன். நீங்கள் தேவனுக்கு பயப்படுகிற பயத்திலும் கல்வி, கேள்வியிலும் சிறந்து விளங்க உங்களை வாழ்த்துகிறேன்.

மத். 14: 23-34 வரை வாசித்தால், அங்கு ஒரு சம்பவத்தைக் குறித்து நாம் தெரிந்து கொள்ள முடியும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது சீஷர்களைத் தனியே அனுப்பிவிட்டு தாம் ஜெபம் செய்ய செல்லலாம் என்று நினைத்தார். சீஷர்களை படலில் அனுப்பி அக்கரைக்குப் போகச்சொன்னார். அப்பொழுது, சீஷர்கள் சென்ற படகு நடுக்கடலை சேர்ந்தபொழுது, பலத்த பெருங்காற்றிலும், பெரிய அலைகளிலும் சிக்கிக் கொண்டது. அப்பொழுது, இயேசு அவர்களிடம் **தண்ணீர் மேல்** நடந்து வந்தார். இயேசு தண்ணீர் மேல் நடக்கிறதை சீஷர்கள் கண்டு, பயந்து **ஆவேசம்** (ஆவி) என்று அலறினார்கள்.

இயேசு அவர்கள் பயந்ததை அறிந்து கொண்டு **நான் தான்**, **பயப்படாதேயுங்கள்** என்று சொன்னார். பேதுரு இயேசுவை நோக்கி **நீரேயோனால், நான் உம்மிடம் வரக் கட்டளையிடும்** என்று கேட்டான். இயேசுவும் பேதுருவை நோக்கி, **வா என்று அழைத்தார்.** பேதுருவும் **இயேசுவை நோக்கி** தண்ணீரில் நடந்தான். ஆனால், காற்று பலமாக அடித்து பெரிய அலைகள் வந்தபோது, பேதுரு **பயந்து** இயேசுவே என்னைக் காப்பாற்றும் என்று கூப்பிட்டான். இயேசு பேதுருவை நோக்கி, **அற்ப விசுவாசியே** ஏன் சந்தேகப்படுகிறாய் என்று கேட்டார். இயேசு படகில் ஏறியவுடனே கடல் அமைதியானது. இந்த சம்பவத்தைத் தான் இம்மாதத்திற்கான பாடமாக நாம் எடுத்துக் கொள்ளப் போகிறோம்.

பிள்ளைகளே! தேவன் ஒரு புதிய ஆண்டை நாம் காணும்படியாக செய்திருக்கிறார். இந்த ஆண்டில் நிச்சயமாக கஷ்டங்கள், சோதனைகள் வரும். எப்படி சீஷர்கள் கடலில் சென்றபொழுது அலைகளும், காற்றும் வந்ததோ அதைப்போல, சில கஷ்டங்கள் நேரிடும். ஆனால், அந்த சமயங்களில் நாம் அதைப்பற்றி கண்டுகொள்ளாமல், அவைகளின் நடுவிலும் **தேவனையும் இயேசுவையும் மட்டும் நோக்கிப் பார்க்க வேண்டும்.** நாம் விசுவாசத்தோடு அப்படிச் செய்ய வேண்டும்.

தேவன் எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்ற விசுவாசம் நமக்கு இருந்தால், அலைகளைப் போன்ற துயரங்களைப் பற்றியோ, அல்லது பெருங்காற்றைப் போல வரும் கஷ்டங்கைளக் குறித்தோ நாம் கவலைப்படவே தேவையில்லை. எனவே, இந்தப் புதிய ஆண்டின் **முதல் சிறுவர் பகுதியின் மூலம்** நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் இதுதான், **இயேசுவை மட்டும் நோக்குங்கள்** மற்றதை அவருடைய கைகளில் ஒப்புக்கொடுத்து விடுங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ★

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை பிப்ரவரி மாத இதழில்)**

1. கானானை சுற்றிப்பார்க்கச் சென்றவர்கள் எத்தனை பேர்?
2. ஓசேயா என்பவர் யார்?
3. மகா நல்லதேசம் என்றவர்கள் யார்?
4. ஓய்வுநாளில் விறகு பொறுக்கினவனை ஏன் காவலில் வைத்தார்கள்?
5. தேவன் யாருடைய வாசஸ்தலத்தை விட்டு விலகிப்போங்கள் என்றார்?
6. இஸ்ரவேல் புத்திரரின் நடுவில் லேவியின் பங்கும், சுதந்தரமும் என்ன?
7. ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பவன் யார்?
8. சபையார் முப்பது நாள் யாருக்காகத் துக்கங் கொண்டாடினார்கள்?
9. இஸ்ரவேலர் பாடின பாட்டு என்ன?
10. கர்த்தருக்குப் பிரியமானது என்ன?

(எண்ணாகமத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்)

## டிசம்பர் மாத வினாக்களுக்கான விடைகள்

1. ஆறு லட்சத்து மூவாயிரத்து ஐநூற்று ஐம்பது (1:46)
2. லேவி கோத்திரம் (1:47)
3. முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரை (4:3)
4. நசரேய விரதம் (6:2)
5. பகலில் மேகம், இரவில் அக்கினித் தோற்றம் (9:16)
6. ரெகுவேலின் குமாரன் ஓபாப் (10:29-31)
7. தபேரா (11:3)
8. மன்னா (11:7)
9. எல்லாத், மேதாத் (11:26)
10. மிரியாம் (12:9-13)

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

1. M. செல்வம் - வெள்ளலூர்
2. S. ஜெயராஜ் - பொள்ளாச்சி
3. J. மாலதி ஜெயக்குமார் - மூலனூர்
4. ர. அபினேஷ் - மூலனூர்
5. ரூபவல்யா - தூத்துக்குடி
6. S. சாந்த குமாரி - நாசரேத்
7. J. ஜெமீலா செல்லையா - நெல்லை
8. ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
9. M. சிப்போரா - திருச்சி
10. V.S.S பால் ராஜ் - மதுரை
11. G. பாக்கிய சம்பூரணம் - ஈரோடு
12. S. ஜான்சி - கோவை
13. A. பிலோமினா - கோவை

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி : தேவன் அன்புள்ளவராகவும், நன்மை செய்பவராகவும், நல்லவராகவும் இருப்பதால் துன்மார்க்கரைத் தண்டிக்க முடியுமா?**

**பதில் :** இன்றைய உலகில் தேவனால் துன்மார்க்கரை அழிக்கவே முடியாது போலத் தெரிகிறது. ஏனென்றால், அவருடைய பங்கு, அன்பு செலுத்துவதும், மன்னிப்பதும்தான், மாறாக, தண்டிப்பதல்ல என்ற எண்ணம் பரவலாக எல்லோரிடமும் காணப்படுகிறது. தேவனுடைய அன்பைப் பற்றி பேசுபவர்கள், அவருடைய இரக்கம், தயவு போன்றவைகளைத் தாராளமாகப் பேசுகிறார்கள். அவருடைய கோபம், அதன் விளைவாக நீதியான தண்டனை என்று வரும்போது தங்கள் வாயைத் திறவாதிருக்கிறார்கள்.

ஆனால், மனிதர்கள் தேவகோபாக்கினையைப் பற்றி பேச விரும்பாமலிருப்பது போல் வேதாகமம் மௌனமாயிருப்பதில்லை. வேதாகமம் பற்றி வேதத்தின் எச்சரிப்பைக் கவனியுங்கள். கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிக்கட்டுகிறவருமான தேவன்; கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர், அவர் தம்முடைய பகைஞருக்காகக் கோபத்தை வைத்துவைக்கிறவர் (நாகூம்1:2) என்று பழைய ஏற்பாட்டின் பக்கங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தேவகோபத்தைப் பற்றி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவர்கள் மேல் நிற்கும் என்றார் (யோவான் 3:36). அப்போஸ்தலனாகிய பவுலும் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு எழுதின வேத வாக்கியங்களில் மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய் தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்றார் (ரோமர் 1:8), மேலும், தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும் என்று சொல்லுகிறார் ( 1தெச 1:7,8). இன்னுமாக அப்போஸ்தலன் யோவானும் வெளி: 6:16-ல், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள் என்கிறார்.

இதினிமித்தம், தேவகோபம் பற்றிய காரியங்கள் இதினிமித்தம், தெளிவாக இருக்கிறது. எப்படியெனில், தேவன் நீதியைச் சரிக்கட்டுகிறவராகவும், உக்கிரகோபமுள்ளவராகவும் இருப்பதால், அவர் நீதியைச் சரிக்கட்டத் தவறுவதேயில்லை. ஆகையால், துன்மார்க்கர் தொடர்ந்து தங்கள் துன்மார்க்கத்திலே வாழும்பொழுது தேவன் அவர்களைத் தண்டியாமல் விடார். தமது பிள்ளைகளாகிய நீதிமான்களை துன்மார்க்கர் துன்புறுத்தும்போது தேவன் நிச்சயம் சகித்துக் கொள்ள மாட்டார். தேவன், ரோமர் 12:19-ல், பழிவாங்குதல் எனக்குரியது நானே பதிற்செய்வேன் என்று சொல்லும்போது, அதை நாம் அசட்டை பண்ணுகிறவர்களாக இருக்கிறோம். நம் நல்ல தேவனால் நிச்சயம் துன்மார்க்கரைத் தண்டிக்கும்பொழுது நாம் சந்தோஷமடைகிறோம். ஒரு வேளை அக்குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லையென்றால் கோபம் கொள்கிறோம். அவரால் முடியும். அவர் அப்படிச் செய்ய வல்லவராயிருக்கிறார் என்பதை நாம் உறுதியாக விசுவாசிக்க வேண்டும். அவர் எப்பொழுதுமே நீதியுள்ள தேவன்தான். ★

# கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார் சங்கீதம் 115:12

Bro.K.M. பிலிப் – சென்றமாத தொடர்ச்சி

**விசுவாசச் செயல் 2 : தேவன் சொன்ன வார்த்தையின்படியே செய்தாள் (1இராஜா. 8:2)**

சூனேமியாள் எழுந்து தேவனுடைய மனுஷன் சொன்ன வார்த்தையின்படியே செய்து, தன் வீட்டாரோடுங் கூடப் புறப்பட்டு பெலிஸ்தரின் தேசத்தில் போய் 7 வருடம் சஞ்சரித்தாள். அதாவது, சுகமாய் சஞ்சரித்தாள். தன் முற்பிதாக்களில் முதல்வரான ஆபிரகாமைப்போல விசுவாசத்திற்கு முதலிடம் கொடுத்து அப்படியே கீழ்ப்படிந்தாள். அதுவும் எதிரி பெலிஸ்தரின் தேசத்திலேயே ஏழுவருடங்கள் எவ்வித குறைவுமின்றி வாழ்ந்தாள். இதைத்தான் ஞானி **ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால் அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும் படி செய்வார்** (நீதி. 16:7) என்றார். மேலும், மோசே மூலம் வழிநடத்தப்பட்ட இஸ்ரவேல் மக்கள், **கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து கீழ்ப்படிந்து நடப்போம்** (யாத். 24:7) என்று தங்களை ஒப்புக்கொடுத்தபோது தேவன் 6 லட்சத்துக்கும் அதிகமான அந்த மக்களைப் பொறுப்பேற்றுக் கொண்டார். நாமும் கூட, தேவனுடைய வார்த்தைக்கு அப்படியே முழுமையாய்க் கீழ்ப்படிந்து நடக்க ஒப்புக் கொடுப்போமானால், நம்மையும் நம் குடும்பத்தையும் தேவன் பொறுப்பேற்றுக் கொள்வார். ஒருமுறை கீழ்ப்படிந்து ஞானஸ்நானத்தின் தேவ ஆசீர்வாதங்களைப் பெற்ற நாம் கீழ்ப்டியாமையினால் இவைகளை இழந்து போகலாமா? கானா ஊர்த் திருமணத்தில் இயேசு வேலைக்காரர்களுக்கு என்ன சொன்னாரோ அதன்படி செய்ததால் அங்கு குறைவுகள் நிறைவாயிற்று (யோவான் 2:1-10) **உம்முடைய வார்த்தையின்படியே** வலையைப் போடுகிறேன் என்று பேதுரு வலையை போட்டதால் இரவு முழுவதும் அவர்கள் பட்ட பிரயாசத்தின் பலனைப் பன்மடங்கு பெற்றுக்கொண்டார்கள் (லூக்கா 5:1-10). ஆம், அவருடைய வார்த்தைக்கு ஜீவனும் வல்லமையும் உண்டு (எபி. 4 :12). **சபை கூடி வருதலை விட்டு விடாதிருங்கள்** (எபி. 10:25) என்ற தேவவார்த்தையை நாம் கட்டளையாகப் பெற்றிருக்கிறோம். நாம் எந்தளவுக்குக் கீழ்ப்படிகிறோம்? மனவிருப்பத்தோடு ஆயத்தமாய் முழுமையாய் சபைகூடிவருகிறோமா? தயவுசெய்து, நடைமுறைக்காக அல்ல, நம்பிக்கையோடு கூடி ஆராதனை செய்யுங்கள். சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ போல **நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன்** என்ற (தானி. 3:17) அசைக்க முடியாத விசுவாசத்தினால் உண்டாகும் தைரியத்தின் பலனை அநுபவியுங்கள். கீழ்ப்படிதலே ஆசீர்வாதம்.

**விசுவாச செயல் 3 : தனக்குள் இருக்கும் தேவ பக்தியைக் கிரியை மூலம் வெளிப்படுத்தினாள்.**

பொதுவாக, பிரச்சினைகள் வரும்போதுதான் நாம் யார் என்ற உண்மை நமக்கும் மற்றவர்களுக்கும் தெரியவரும். சூனேமியாள் ஏழுவருடங்கள் சென்றபின்பு திரும்ப தன் தேசத்திற்கு வருகிறாள். தேவனுடைய வார்த்தையின்படி செய்து வந்த அவளுக்கு அங்கு பேரிடி காத்துக்கொண்டிருந்தது. ஆம், அங்கே அவள் தன் வீட்டையும், வயலையும், தனக்குண்டான எல்லாவற்றையும் இழந்தவளாகக் காணப்பட்டாள் (8:3) அவைகளை மற்றவர்கள் ஆக்ரமித்துக் கொண்டார்கள். ஆனாலும், அவள் அங்கேயே உட்கார்ந்து புலம்பவில்லை. ஊரைக் கூட்டி நியாயம் கேட்கவில்லை. அல்லது நகோமிபோல **நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை வெறுமையாய்த் திரும்பி வரப்பண்ணினார்** (ரூத் 1:21) என்று தேவனை குறைசொல்லவில்லை.

இப்படிச் செய்து தேவ ஊழியரைக் கனப்படுத்தக் கிடைத்த வாய்ப்பை முழுமையாய்ப் பயன்படுத்திக்கொண்டாள். **நன்றாய் விசாரனை செய்கிற மூப்பர்களை விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்** (1தீமோ. 5:17) என்ற தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றினாள். இப்படித் தேவனைக் கனப்படுத்திய சூனேமியான தேவன் சும்மா விட்டு விடுவாரா? **என்னைக் கனப்படுத்துகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்** (1சாமு. 2:30) என்று வாக்குக் கொடுத்த தேவன் அவளைக் கனம் பொருந்திய ஸ்திரி என்று பாராட்டியதோடு, உற்சாகமாய்க் கொடுத்த அவளிடத்தில் பிரியம் வைத்து, அவளுக்கு குழந்தைப் பாக்கியத்தைக் கொடுத்து குறைவை நிறைவாக்கியதோடு **தாய்** என்ற கனத்தையும் கொடுத்து பெருமைப்படுத்தினார். மேலும், இப்படி நினைத்து நினைத்து கொடுத்து ஊழியரைத் தாங்கிய சூனேமியாளை ஏழுவருடப் பஞ்சத்தில் தாங்கும்படியாய் தேவன் அவளை நினைத்துப்பார்க்கிறார். உடனே எலிசாவை அனுப்பி அவள் குடும்பத்தையே பஞ்சத்திலிருந்து காப்பாற்றினார்.

அன்பானவர்களே! நாம் நம் தேவனைக் கனப்படுத்த பெற்றுள்ள வாய்ப்புகளை எண்ணிப்பாருங்கள். சபை கூடிவருதல், ஊழியரைக் கனப்படுத்துதல், ஊழியரோடு இணைந்து ஊழியம் செய்தல், காணிக்கை கொடுத்தல், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துதல், ஏழை எளியவர்களுக்கு உதவி செய்தல் இப்படி நம் தகுதிக்கேற்ப அநேக வாய்ப்புகள் நமக்கு கிடைத்துள்ளது. நாம் எந்தளவு இதில் ஈடுபாடு கொண்டு தேவனைக் கனப்படுத்தியிருக்கிறோம்? ஆதித்திருச்சபையார் சிதறடிக்கப்பட்டபோதும், அதையும் ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதி எங்கும் சுற்றித் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள் (அப். 8:4).

பவுலின் நாட்களிலே பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கைக் கொடுக்க வாய்ப்புக் கிடைத்த மக்கெதோனிய நாட்டுச்சபையார் **தங்களுக்கு ஏற்பட்டிருந்த மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரமுடையயவர்களாயிருந்தும் தங்கள் பரிபூரண சந்தோசத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்** என்று பார்க்கிறோம் (2கொரி. 8:2). இதனால் விசுவாசிகளின் தொகை 4000, 5000 என்று பெருகிற்று. மேலும், சபைகள் சமாதானம் பெற்று பக்தி விருத்தி அடைந்ததே தவிர (அப். 9:31) ஒருபோதும் வெட்கப்பட்டு, துக்கப்பட்டு நிற்கும்படி தேவன் அவர்களை விட்டு விடவில்லை. நாமும் கூட சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டிராமல், தேவனைக் கனப்படுத்த கிடைத்த எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்துவோம். தேவ மகிமைக் கென்று நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு. **ஒருகலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று குமாரன் இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவன் வாக்களித்திருக்கிறர்** (மத். 10:42). கொர்நேலியு செய்த ஜெபங்களும் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாயிருந்தது என்று அப்போஸ்தலர் 10 : 4-ல் பார்க்கிறோம். ஆம், நாம் தேவனைக் கனப்படுத்தும்படியாய் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் கர்த்தர் நினைத்திருக்கிறார். அவர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப் பண்ணுவார் (சங்கீதம் 115:14). ★

## மனதின் பாவங்கள்

தீமையான எண்ணங்களைப்பற்றிய கேடான மனது


(மத்தேயு 5 : 27,28)

சுயமதிப்பைப்பற்றிய மேட்டிமையான மனது

(ரோமர் 12 : 16)

அவிசுவாசத்தைப்பற்றிய சந்தேகிக்கும் மனது

(லூக்கா 24 : 38)



கவலைகளைப்பற்றிய சிந்திக்கும் மனது

(லூக்கா 12: 29)

பறிக்க நினைக்கும் சுயநலமான மனது

(லூக்கா 12 : 17-21 )

# தேவனுடைய வருஷங்கள்

Bro. பாண்டியன்

**ந**ம்முடைய வாழ்க்கையில் மற்றுமொரு ஆண்டை தயவாகச் சேர்த்துள்ளார். நமக்குத்தான் புதிய ஆண்டு, மாதம், வாரமெல்லாம். பரலோகம் நித்தியமானது. யோபுவின் நண்பன் தேவனைப் பற்றிக் குறிப்பிடும்போது, **இதோ தேவன் மகத்துவமுள்ளவர், நாம் அவரை அறிய முடியாது அவருடைய வருஷங்களின் இலக்கம் ஆராய்ந்து முடியாதது" என்று குறிப்பிடுகிறார்** (யோபு 36:26). நாம் அதிகமாகக் கேள்விப்படும் சங்கீதமாக புதிய ஆண்டில் 65ம் சங்கீதத்தைக் குறிப்பிடலாம். அதில்தான் நன்கு அறிமுகமான வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர் (வச.11) என்ற வார்த்தை வருகிறது. உண்மையில் அந்த வசனம் தேவனுடைய இரக்கம் மற்றும் அன்பை நமக்கு வெளிப்படுத்துகிறது. மனுஷன் செய்கிற அக்கிரமத்திற்கு தேவன் எப்போதோ இந்த உலகத்தை அழித்திருக்க வேண்டும். ஆனால், தம் குமாரன் மூலம் ஒரு இரட்சிப்பின் வழியை ஏற்படுத்தி இன்னும் யாராவது மனந்திரும்பி தம்மிடம் வரமாட்டார்களா என உருகும் தேவ அன்பே அந்த வசனத்தின் வெளிப்படுத்தலாகும். தொடர்ந்து அந்த அதிகாரத்தில் நாம் காணும் முக்கியக் குறிப்புகள் என்னவெனில், தேவன் சபையில் துதிகளையும் (சீயோன்) காணிக்கைகளையும் அங்கீகரிக்கின்றார். நம்முடைய ஜெபங்களை கவனித்துக் கேட்கிறார். தேவநதி பூமியை செழிப்பாக்கும் என்ற சொற்றொடரில் (வச.9) ஆண்டவர் இயேசுவின் உபதேசத்தால் சபை மக்கள் செழிப்பாவதைக் காண்கிறோம். தேவனுடைய வார்த்தைகளே ஒரு மனுஷனுடைய வாழ்க்கையை செழிப்பாக்க வல்லது (யோவான் 7:38).

யோவேல் தீர்க்கதரிசி தேவ ஆசீரைப்பற்றிக் குறிப்பிடும் போது " **தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். யோவேல்2:21 என்று ஆறுதல் படுத்துகிறார்.** அதற்கு முன்பாக, ஜனங்கள் செய்ய வேண்டியது, வஸ்திரத்தையல்ல இருதயத்தைக் கிழித்து தேவனிடம் திரும்பவேண்டும். (2:13) என்று ஆலோசனை சொல்லுகிறார். தாங்கமுடியாத கஷ்டம் வரும்போது, இஸ்ரவேல் ஜனம் தங்கள் வஸ்திரங்களை கிழித்துக் கொள்வது வழக்கம். ஆனால், தேவன் நம் இருதயத்தை நோக்குபவர். ஆதலால், அவருக்கு ஆகாத காரியங்களை அகற்றி இருதயத்தை சீராக்கும்போது நமக்கு பயம் இல்லாத ஒரு வாழ்க்கையும், மகிழ்ந்து களி கூரும் இருதயத்தையும் தந்து கர்த்தர் பெரியகாரியங்களைச் செய்வார். நமக்கு மகிழ்ச்சியான வாழ்க்கை வேண்டுமானால் தேவனிடம் திரும்புவது

காலத்தில் வேத புத்தகத்தைத் தேடிக் கண்டெடுத்து வாசித்தபோது அதன்படி நாம் நடக்கவில்லையே என்று அதிர்ச்சியடைந்த யோசியா ராஜா தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டான் (2ராஜ. 22:11) அதுமாத்திரமல்ல, அவன் தேவனுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தி அழுதபடியால் தேவன் அவனுடைய விண்ணப்பத்தைக் கேட்டு, பொல்லாப்பை காணாத சமாதானத்தைக் கட்டளையிட்டார். நாமும் தேவனிடத்தில் திரும்பும்போது இழந்ததையும் மறுபடியும் பெறுவோம் என்கிற ஆசீர்வாதத்தையும் மற்றும் திருப்தியான, தேவனைத் துதிக்கும் சிலாக்கியத்தையும், ஒருபோதும் வெட்கப்பட்டுப் போகாத ஆசீர்வாதமும் தேவனிடத்தில் உண்டு என்று யோவேல் தீர்க்கதரிசி மூலம் அறிகிறோம் (யேஸவேல் 2:25-27) இன்னும் நம்மில் அநேகர் சரியாக இருப்பதாக நம்முடைய இருதயம் சொல்வதை நம்பிக் கொண்டிருக்கிறோம். நம் முகத்தில் இருக்கும் அழுக்கு மற்றவர் சொன்னாலொழிய எப்படி நாம் அறியாமல் இருக்கிறோமோ அதே போல வேத சனமாகிய கண்ணாடியே நம்மைச் சீர்படுத்தும் ஆசானாக உள்ளது. அதற்காகவே தேவன் நமக்கு சபை கூடி தேவவசனத்தைக் கேட்கும் வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார். நாம் எப்போதெல்லாம் வழி விலகுகிறோமோ அப்போதெல்லாம் சபையின் ஐக்கியமும் தேவ வசனங்களும் நம்மைப் பிடித்து இழுத்து தேவனிடம் திரும்ப வைக்கின்றது. அதை மீறி நீங்கள் தேவனை விட்டுப் பிரிந்து சென்றால் உங்கள் கைகளின் வேலையில் தேவனுடைய அடி விழும். நம் சம்பாத்தியம் உதவாமற்போகும் ஆபத்து நேரிடும் என்று ஆகாய் தீர்க்கன் எச்சரிக்கிறார் (ஆகாய் 2:17). நாம் சிந்தித்து தேவனிடம் திரும்பும்போது **நான் இன்று முதல் உங்களை ஆசிர்வதிப்பேன் என்று சொல்லுகிறார் (ஆகாய்2:19).**

எனக்கன்பான சகோதரனே சகோதரியே! ஆசிர்வதிக்க ஆயத்தமாயிருக்கும் தேவனை நாம் தொழுது கொண்டு வருகிறோம். நாம் மகிழ்ந்து களிகூரவே தேவன் விரும்புகிறார். ஆகவே, இந்த புதிய ஆண்டில் சபைக்கூடுதலை எந்தக் காரணம் கொண்டும் விட்டுவிடக் கூடாது என்கிற உபயோகமான தீர்மானத்தை எடுப்போம். மனுஷருக்காக அல்ல தேவனுக்காக சபை கூடி வந்து சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் சுதந்தரித்துக் கொள்வோம். தேவனுக்கென்று உற்சாகமாய்க் கொடுத்து அவர் அதிகமாகக் கொடுக்கும் ஆசீர்வாதத்தைப் பெறுவோம். சபை கூடுதலே தேவனுடைய செட்டைகளின் நிழல். அதில் நீ வரும் போதுதான் உண்மையான திருப்தி கிடைக்கும். உன் தாகம் தீர்ந்து பேரின்பமாக மாறும் (சங். 36:7,8).

நீங்கள் தேவனிடம் அடைக்கலம் புகும்போது மட்டுமே (சபை கூடுதல்) சந்தோஷமும் கெம்பீரமும் உண்டாகும் மட்டுமல்ல தேவனுடைய பாதுகாப்பும் களிகூருதலும் உண்டாகும் (சங். 5:11). மனுஷன் இன்றைக்கு சந்தோஷத்தையும், கௌரவத்தையும், வெளியிலே

தேடிக்கொண்டிருக்கிறான். எல்லாம் நம் தேவ சமூகத்தில் இருக்கின்றது. ஒரு வேளை உங்களில் யாராவது சபை கூடுதலை அசட்டை செய்து தேவகோபத்திற்கு ஆளாகி இருக்கலாம் ஆனால், வசனம் சொல்கிறது அவருடைய கோபம் ஓர் இமைப்பொழுதே அவருடைய தயவோ ஆயுள் காலம் வரை. சாயங்காலத்தில் அழுகைத் தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும் (சங். 30:5) ஆகவே, மறுபடியும் சபை கூடி வரத் தயக்கம் வேண்டாம். அவரே நம் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்ற வல்லவர் சங். (30:11) நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார் என்று வாசிக்கிறோமே அதன் அர்த்தம் இதுதான். நம்முடைய பிரச்சனை கஷ்டங்களையே பேசிக் கொண்டிருக்கும் நமது வாயை தேவன் அருளும் நன்மைகளால் மாற்றி ஆனந்தக் களிப்பாகத் தேவன் இந்த ஆண்டிலே உங்களுக்கு மாற்றித் தருவாராக. நீதிமான்களே கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள். செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்த முழக்கமிடுங்கள் என்கிறார் சங்கீதக்காரன். நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம், நமதாண்டவர் இயேசுவின் ரத்தத்தால் நீதிமான்களாக்கப்பட்டுள்ளோம். ஆகவே, சபை கூடி வரும்போது உங்கள் உற்சாகமான குரலினால் தேவனை மகிமைப்படுத்துங்கள். நம்மை நீதிமான்களாக மாற்றிய தேவனுக்கு முன்பாக நம் ஆகாத காரியங்களை விட்டொழித்து, தொடர்ந்து நீதிமான் என்னும் பட்டத்தை தக்கவைத்துக்கொள்ள பிரயாசப்படுவோம். நாம் தேவனுக்குப் பயந்து நடக்கும்போது அவர் வழியை நமக்குப் போதிப்பார். அவனுடைய ஆத்துமாவே நன்மையில் தங்கும், நம் சந்ததியையும் தேவன் ஆசிர்வதிப்பார். ஆக, முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தைத் தேடி ஆசீர் பெறுவோம். தேவக்கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ★

## தேவனுடைய சபை

புதிய ஏற்பாட்டு சபை செங்கல், மரம், கல், போன்றவைகளால் ஏற்பட்டது என்று அநேகர் நினைக்கிறார்கள். அதனால் தான் ஞாயிறு ஆராதனைக்குப் பின் அது வெறுமையாக நிற்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், தேவனுடைய சபை ஆத்துமாக்களால் ஆனது. அவர்கள் எட்டுத் திக்கும் தேவனுடைய ஆச்சரியமான அன்பையும் சிலுவையிலறையப்பட்ட இயேசுவையும் அறிவிக்கிறார்கள். ஒரு ஜீவிக்கும் சபை - ராஜரீகமான குடும்பம். கிறிஸ்து ராஜாவாக ஆளுகை செய்கிறார். கூடி வருகின்ற கட்டிடத்தின் கல்லும், மரமும் போன பிறகும் கிறிஸ்துவின் சபை என்றைக்கும் நிலைத்திருக்கும்.

3. யோவான் 14:9-ல் என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று இயேசு சொன்னதாலும், நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள் என்று சொன்னதாலும், பிதா இயேசுவாக வந்தார் என்று வாதிடுகின்றனர்.

இதே இயேசுதான் யோவான் 17-ம் அதிகாரத்தில் ஜெபிக்கிறார். அவர் தம்முடைய ஜெபத்தில் அப்போஸ்தலர்களுக்காகவும் அவர்களுடைய போதனையைக் கேட்டு அவரை ஏற்றுக் கொள்பவர்களுக்காகவும் ஜெபித்தார் (யோவான் 17:20-22). இதில் வசனம் 20,21-ன் படி பிதாவும், குமாரனும் ஒன்றாயிருக்கிறது போல அப்போஸ்தலர்களும் அவர்களுடைய வார்த்தையினால் இயேசுவை விசுவாசிக்கிறவர்களும் ஒன்றாயிருக்க ஜெபித்தார். இப்பொழுது, பிதா, குமாரன், அப்போஸ்தலர்கள், இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களான இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்களும் ஒரே நபர்தத்துவமுடையவர்களா? இது எந்த அளவுக்கு ஒற்றுமையை வலியுறுத்துகிறதோ அந்த அளவுக்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் ஒற்றுமையை யோவான் 14:9-11- ல் கிறிஸ்து பதிவு செய்கிறார். இது பிதாவாகிய தேவனை தனித்துவ நபராகவோ பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூன்றும் ஒரே நபர்தத்துவத்தைக் குறிப்பதோ அல்ல (யோவான் 14:20).

4. யோவான் 14:16-18-ல் இயேசு பரலோகத்துக்குப் போய் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியாக வந்ததற்கு சான்று என்கின்றனர். இந்த வசனங்களை மீண்டும் ஒருமுறை வாசியுங்கள் நான் பிதாவை வேண்டிக்கொள்வேன். அப்பொழுது, என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை உங்களுக்குத் தந்தருளுவார். இதிலே

1. வேண்டிக் கொள்வது யார்? இயேசு
2. எங்கிருந்து வேண்டிக்கொள்கிறார்? பூமியில்
3. யாரிடத்தில் வேண்டிக்கொள்கிறார்? பிதாவிடத்தில்
4. என்ன செய்யும்படி? பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்பும்படி
5. யார் அப்போஸ்தலருக்கு அவரைத் தந்தருளுவார்? அவர் (பிதாவாகிய தேவன்)

எனது கேள்வி

1. இயேசு, பிதாவாக இருந்து குமாரனாக பூமியில் வந்திருந்தால் பிதாவை அவர் எப்படி வேண்டிக் கொள்ளமுடியும். தனக்குத் தானே வேண்டிக் கொண்டாரா?

2. தாமே பரிசுத்த ஆவியாக இயேசு வந்திருந்தால் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை பிதா தந்தருளுவார். இதன் பொருள் தாமே வேண்டிக் கொள்வோம் தம்மைத் தாமே தந்தருளுவோம்? இது மதியீனமாயில்லை?

வசனம் 18-ல் நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன் என்றும் உங்களிடத்தில் வருவேன் என்றும் சொன்னதால் இயேசு பரமேறிப் போய் பின்பு பெந்தெகொஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியாக வந்தார் என்கிறார்கள். இவ்வசனத்தில் (18) இயேசு தமது 2-ம் வருகையில் வருவதைக் குறித்துப் பேசுகிறார். இதைத்தான் யோவான் 14:3-ல் குறிப்பிட்டார். **நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன்** என்று.

நான் போய் என்பது, பிதாவிடத்தில் பரலோகத்திற்குப் போய் (யோவான் 14:4,5,6) ஸ்தலத்தை ஆயத்தப்படுத்துவதாகச் சொன்னார். நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி என்று சொன்னார். பூமியிலே இயேசு ஆவியாக (தேற்றரவாளனாக ) வந்திருந்தால் அதுவும் என்றென்றைக்கும் அப்போஸ்தலருடன் இருக்கும்படி வந்திருந்தால் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்காந்திருப்பது யார்? (அப்.7:55,56) அவர்தான் பூமியில் தேற்றரவாளனாக இருக்கிறாரே, மறுபடியும் வருவது எப்படி?

★

## நம் இரட்சகரை சிலுவையிலறைந்த பாவங்கள்

அறியாமை என்னும் பாவம் (அப். 3 : 17)

பகை என்னும் பாவம் (மத். 7 : 20)

பொறாமை என்னும் பாவம் (மாற்கு 5 : 11)

அவிசுவாசம் என்னும் பாவம் (யோவான் 1 : 11)

சுயநலம் என்னும் பாவம் (மத். 26 : 14 – 16)

# அடிப்படைக்குத் திரும்புவோம்

Bro. டேனி கிளைன்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தேவன் துக்கத்தோடு தம்முடைய தீர்க்கதரிசியாகிய ஏரேமியா மூலமாக இவ்விதமாகப் பேசினார். **திகைத்துத் திடுக்கிடத்தக்க காரியம் தேசத்திலே நடந்து வருகிறது. தீர்க்கதரிசிகள் கள்ளத் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்; இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது; ஆனாலும் முடிவிலே என்ன செய்வீர்கள்?** என்று. தேவன் எப்போதுமே தமது சாயலிலும் தமது ரூபத்தின்படியேயும் உண்டாக்கின மக்கள் மீது அக்கறை உடையவராகவே இருக்கிறார் (ஆதி.1:26,27). ஏனென்றால், அவர் அழிவே இல்லாதவர். மனித இனத்தின் முடிவு, அதாவது, பரலோகம் அல்லது நரகம். தேவன் எப்போதுமே மனிதனிடத்தில் அன்பு கூர்ந்து அவனுடைய தேவைகள் எல்லாவற்றையும் சந்தித்து வருகிறார். ஆவிக்குரிய பிரகாரமாகவும், சரீரப் பிரகாரமாகவும் எந்தப் பாதையில் நடக்க வேண்டுமென்பதை ஆரம்பத்திலிருந்தே மனிதன் அறிந்துகொள்ள மனிதனிடத்தில் தயவாயிருக்கிறார். ஆயினும், ஒவ்வொரு காலத்திலும் மனிதன் தேவனுடைய வழியிலிருந்து வழிதப்பி, முற்றிலும் வித்தியாசமான பாதையில் நடந்து கொண்டிருக்கிறான்.

மனிதன் உண்மையில்லாதவனாக இருந்தபோதிலும் மனிதன் மீதான தேவனுடைய அக்கறை மாறவே இல்லை. தேவனுடைய அற்புதமான குணாதிசயங்களில் ஒன்று, அவர் மனித இனத்தின் மீது நீடிய பொறுமை உடையவராக இருப்பது (2பேதுரு 3:9). ஆனால், பல நூற்றாண்டுக்கு முன்பாக தேவன் எரேமியா மூலமாக மனிதர்களிடத்தில் வைத்த கேள்வி, ஆம், மகா பெரிய கேள்வி. இன்றும் அபாயகரமாக இருக்கிறது; "**ஆனாலும், முடிவிலே நீங்கள் என்ன செய்வீர்கள்?**

அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியர் 6:7,8 வசனங்களில் சொல்லியிருக்கிறபடி, ஒரு நாளில் அதாவது, நியாயத்தீர்ப்பு நாளில் நாம் தேவனை எதிர்கொள்வோம். **மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்; மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்**.

மனிதனுடைய பூமிக்குரிய வாழ்க்கையின் முடிவு அவர் இருப்பது போலவே நிச்சயமாயிருக்கிறது. இந்த பூமிக்குரிய வாழ்க்கை முடிந்த பிறகு, இரண்டு காரியங்கள் மட்டுமே இருக்கும். நரகத்தில் நித்திய ஆக்கினை அல்லது பரலோகத்தில் நித்திய ஜீவன். இவைகளைப் பற்றி கிறிஸ்து (மத். 25:46) போதித்திருக்கிறார்.

தேவன் ஆரம்பத்திலிருந்தே, மனிதன் இந்த உலகத்தில் எப்படி வாழ வேண்டும் என்பதை போதித்து வருகிறார். முதலாவது, அவர் நேரடியாக மனிதனிடத்தில் பேசினார்; அதன்பின்பு, தீர்க்கதரிசிகள் மூலமாகப் பேசினார்; கடைசியாக, அவர் தம்முடைய வார்த்தையாகிய இயேசுவை மனித உருவத்தில் அனுப்பினார். அவர் தான் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து. நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படி ஓர் எடுத்துக்காட்டான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்.

இயேசு நம்முடைய அனுதின வாழ்க்கையில் வழிகாட்டும் படியாக அருமையான காரியங்களை போதித்திருக்கிறார் (எபி.1:1,2; 1பேதுரு 2:21). மத். 5,6,7 அதிகாரங்களில் இயேசு செய்த மலைப் பிரசங்கத்தைப் பாருங்கள். அதில் இயேசு ஆழமான சத்தியங்களைப் பேசியிருக்கிறார்; **ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்.... துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்..., சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்...நீதியின் மேல் பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.... இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்....இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.....இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது. இன்னும் உங்கள் சத்துருக்களைச் சிநேசியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள், பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களுமாம்.**

இவைகளெல்லாம் தேவனுடைய வார்த்தையின் அடிப்படைப் போதனைகள். நம்முடைய பக்தி வாழ்வுக்கு ஒரு வடிவம் கொடுக்க நாமெல்லாரும் இதனிடத்திற்குத் திரும்ப வேண்டும். ஆனால், இன்றைய உலகத்தில் எதிர்மறையான வழிமுறை நாடப்படுகிறது. அச்சிடப்பட்ட தகவல்களும், ஊடகங்களும் பெருகிவிட்டபடியால், மக்கள் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள். எல்லா வகையிலும் ஒழுக்கக்கேடு தலைதூக்கி நிற்கிறது. தேவன் வெறுக்கின்ற காரியங்களான விவாகரத்து, ஓரினச் சேர்க்கை, பெருமை, பொய், கொலை, கருக்கலைப்பு, பண ஆசை போன்ற காரியங்கள் மகிமைப்படுத்தப்படுகின்றன. இது எரேமியாவின் நாட்களில் தேவன் வானத்திலிருந்து பூமியைப் பார்த்துப் பேசின அதிர்ச்சியூட்டும் வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகிறது. அவர்கள் அருவருப்பானதைச்

செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களோ? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்; ஆதலால் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள்; நான்அவர்களை விசாரிக்குங்காலத்தில் இடறுண்டு போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமியா 6:15).

மக்கள் சில காரியங்களைத் தனிப்பட்ட முறையில் கூட பேசுவதற்கு வெட்கப்பட்ட காலம் போய் இப்போது அதே காரியத்தை எவ்வித நாணமுமின்றி வெளிப்படையாகவே பேசுகிறார்கள். அந்தரங்கத் தலைப்புகள் விவாதிக்கப்படுவது மட்டுமல்லாமல், தொலைக்காட்சி மூலமாக நம்முடைய வீடுகளில் கூட காட்டப்படுகிறது. அதே விஷயங்கள் இலக்கிய வடிவத்தில் எல்லா மொழிகளிலும், எல்லா இடங்களிலும் கிடைக்கிறது.

தேவன் வானத்திலிருந்து இறங்கி வந்து ஜனங்கள் தொலைக்காட்சி பார்ப்பதையோ, அவர்கள் விரும்புகிற இலக்கியத்தைப் படிப்பதையோ தடைசெய்ய மாட்டார். அதுபோல மக்கள் எதைச் செய்ய விரும்புகிறார்களோ அதைத் தடுக்கவும் மாட்டார். அதை அவர் ஏதேன் தோட்டத்தில் கூட செய்யவில்லை. தேவன் ஆதாமையும் , ஏவாளையும், உண்டாக்கி தோட்டத்திலே வைத்து நன்மை, தீமை, கீழ்ப்படிதல், கீழ்ப்படியாமை போன்றவற்றில் எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்ளட்டும் என்று சுதந்திரத்ததைக் கொடுத்தார். அவருடைய சித்தத்திற்கு அப்பால் அவர்கள் போகக்கூடாது என்று எச்சரித்தார். அவர்கள் கீழ்ப்படியாமல் போகும் அந்த நாளில் சாகவே சாவார்கள். அதாவது, ஆவிக்குரிய பிராகரமாக அவர்கள் தேவனிடத்திலிருந்து பிரிந்து, சரீரப்பிரகாரமாக சாகத் தொடங்கினார்கள். ஏனெனில், மனிதன் பாவம் செய்தான்.

## நாளும் நடப்பும்

- குடியரசு தினக் கொண்டாட்டத்தின் போது பிளாஸ்டிக் தேசியக் கொடிகளைப் பயன்படுத்த வேண்டாம்.
  – மத்திய உள்துறை அமைச்சகம்
- சாக்லெட் பிரௌன் கலரில் புதிய பத்து ரூபாய் நோட்டுகள் விரைவில் வெளியீடு. – ரிசர்வ் வங்கி
- சேமிப்புக் கணக்குகளின் குறைந்தபட்ச இருப்புத் தொகையை மேலும் குறைக்கத் திட்டம். – எஸ்பிஐ மேலாண் இயக்குனர்
- குழந்தைத் திருமண தடைச் சட்டத்தை மாநிலங்கள் தீவிரமாக
  – தேசிய மனித உரிமைகள் ஆணையம்
- நிகழாண்டில் துறைவாரியாக காலியாக உள்ள 3,235 பணியிடங்களுக்கு தேர்வு நடத்தப்படவுள்ளது. – டிஎன்பிஎஸ்சி

